பேரவை நடக்கும் காலத்தில் குளிர்சாதன வசதி, மின் வசதி, ஒலிபெருக்கி வசதிகள் செய்த பொதுப் பணித் துறையினருக்கும், போக்குவரத்துத் துறையினருக்கும், பேரவைக் காவலர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகளைத் தினமும் ஒளிப்பதிவு செய்து, ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், பேரவை நடவடிக்கைகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சென்ற அகில இந்திய வானொலி, இந்தியத் தொலைக்காட்சி, இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் அனைத்து அலுவல்களையும் முன் நின்று நடத்துவதற்குப் பெரிதும் துணை புரிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை தனியே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் அனைவர் சார்பிலும் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி முடிக்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்-தொடர்ச்சி

(ஆ) விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்த அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 9-43 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

180. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் பி பகுதியைச் சேர்ந்த 1,2,30,36,39 மற்றும் முதலாவது அட்டவணையில் பி பாகத்தில் 18 ஆம் இனத்தில் (iii) துணை இனத்தில் சில பொருட்களை இணைப்பது சம்பந்தமாக வணிக வரித் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 30 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (ஆறு அறிவிக்கைகள் [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

181. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி சில பெட்ரோலியப் பொருட்களை சில எண்ணெய் நிறுவனங்களுக்கு விற்பனை மற்றும் கொள்முதல் செய்வதில் வரி குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 31 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (ஒன்பது அறிவிக்கைகள்) [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

182. வணிக வரிகள் துறையின் 18-8-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட 11(1)/வ.வ./45(இ-4)/2001 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 11(1)/வ.வ.அ.நி./41 (ஏ-2)/93 ஆம் எண் அறிவிக்கை ஆகிய அறிவிக்கைகளில் வேறுபாடு செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 32 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது